**SRI KALISWARI COLLEGE (AUTONOMOUS), SIVAKASI.**

**DEPARTMENT OF TAMIL**

## i. The Programme Specific Outcome:-

### a) Knowledge:

- மாணவர்களின் அறிவாற்றலை மேம்படுத்தும் தமிழ் மொழியை முதுகலை பட்டப்படிப்பில் (M.A) தமிழர் வரலாறு, கலை, இலக்கியம், பண்பாடு ஆகியவற்றை இணைத்துக் கற்றுச் செல்கின்றனர்.
- தமிழ் இலக்கியத்தின் புதிய துறைகளான நாட்டுப்புறவியல் (Folklore), மானிடவியல் (Anthropology), மொழியியல் (Linguistics), இதழியல் (Journalism), நாடகம் மற்றும் அரங்கக்கலை (Dramatic Arts), திரைப்படக்கலை (Film and Television) போன்ற பிரிவுகளில் அறிவாற்றலை வளர்ப்பதற்காகவும் ஆராய்ச்சி மேற்கொள்ள உதவும் என்ற வகையிலும் இதில் சேர்வதில் ஆர்வம் காட்டியுள்ளனர்.

### b) Skill Development:

- ஒவ்வொரு பருவத்திற்கும் நடத்தப்படும் சிறப்புப் பொழிவுகளின் மூலம் மாணவர்கள் மேடைப் பேச்சாற்றல் திறனை வளர்த்துக் கொள்கின்றனர்.
- படைப்பாக்கத் திறனை வளர்த்துக் கொண்டு செல்கின்றனர்.
- பேச்சுக்கலை, இதழியல், மொழியியல் குறித்த பல்வேறு தனித்திறன்களில் மாணவர்கள் பயிற்சி பெற்றுச் செல்கின்றனர்.
- இலக்கியங்களை அறிவியல் வழி ஆராய்வதற்கு வழி செய்கின்றது.

### c) Higher level Ability & Progression to Higher Studies

- முதுகலை (M.A) பயின்று, ஆய்வியல் நிறைஞர் பட்டப்படிப்பு (M.Phil) முடித்து, கல்லூரி ஆசிரியர் ஆவதற்குரிய திறனை வளர்த்துச் செல்லல்.
- முதுகலை (M.A) முடித்து பி.எல். சட்டப்படிப்புப் படிப்பதற்குரிய பேச்சாற்றலையும் எழுத்தாற்றலையும் பெற்றுச் செல்கின்றனர்.
- இதழியல், நாட்டுப்புறவியல், மொழியியல்,, நாடகம் மற்றும் அரங்கக்கலை, தொனமவியல், மானிடவியல், இந்தியத் தத்துவம், ஒப்பிலக்கியம் போன்ற முதன்மைப் பிரிவுகளில் முதுகலைப் பட்டம் பெறவும்,
- சைவ சித்தாந்தம், இதழியல் மற்றும் தகவலியல், நூலகம் மற்றும் தகவலறிவியல், காவல் துறை நிர்வாகம், பள்ளி நிர்வாகம், நிகழ்கலை மற்றும் கலாச்சாரம், குற்றவியல் மற்றும் தடய அறிவியல், மனித உரிமைகள் மற்றும் அமைதி, திரைக்கதை எழுதுதல் பயிற்சி ஆகிய முதுநிலை பட்டய மற்றும் சான்றிதழ் படிப்புக், மேலும் படிக்கத் தூண்டுதல் பெற்றுச் செல்கின்றனர்.

**d) Entrepreneurship and Employment**

- சட்டத்துறை வல்லுநராக மற்றும் வழக்கறிஞராகப் பணியாற்றல்.
- காவல்துறையில் தகுதி பெற்றுப் பணியாற்றல்.
- முதுகலை படிப்பு முடித்த பின், பல்கலைக்கழக மானியக்குழு நடத்தும் SET, NET தேர்வில் தேர்ச்சி பெற்று, கல்லூரி ஆசிரியராகப் பணியாற்றல்.
- இதழியல் படிப்பு படித்த பின் செய்தியாளராகவும், துணை ஆசிரியராகவும், ஆசிரியராகவும் கணினி அறிவு பெற்று, பிழை திருத்துநர் பணிகளிலும் திறம்பட பணியாற்றல்.
- நாட்டுப்புறவியல் மாணவர்கள் கலைகளை வளர்ப்பதோடு தேசிய நாட்டுப்புறக்கழகத்தோடு இணைந்து கள ஆய்வாளராகப் பணியாற்றல்.
- தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் (TNPSC) நடத்தும் தேர்வுகயில் பங்கு பெற்று, வெற்றி பெற்று, அரசு அலுவலகங்களில் பணியதற்றல். இந்து சமய அறநிலையத்துறையின் மூலமாகக் கோவில்களில் பணியாற்றல்.

நாடக இயக்குநராகவும் நல்ல பேச்சாளராகவும் அகில இந்திய வானொலியில் பணியாற்றல்.
மக்கள் தொடர்பு பணியாளராகவும் பணியாற்றல்